දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary: 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk
ඔබේ අංකය / உமது இல. / Your No. ........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாயா"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.
මගේ අංකය / எமது இல. / My No. ........................................
දිනය / திகதி / Date: 2014.04. 23

சுற்றுநிருப இல: 12/2014

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல அதிபர்கள்

## விவசாய விஞ்ஞான அறிவுப் போட்டிகள் - 2014

2014 ஆம் ஆண்டில் தரம் 11 இல் கற்று முதற் தடவையாக க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சைக்குத் தோற்றவுள்ள விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும் பாடத்தைக் கற்கும் மாணவர்களின் அறிமுறை மற்றும் செயன்முறைத் திறன்களை வளர்க்கும் நோக்கில் விவசாய விஞ்ஞான அறிவுப் போட்டியொன்றை நடாத்த கல்வி அமைச்சின் விவசாய மற்றும் சுற்றாடல் கிளை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இப்போட்டிகள் கோட்ட மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் ஆகியவற்றில் நடாத்தப்படவுள்ளது.

### 01. நோக்கங்கள்

- ❖ அறிமுறை மற்றும் செயன்முறைத் திறன்களை மாணவர்களிடையே வளர்த்தல்.
- ❖ க.பொ.த(சாதாரண தர) பெறுபேறுகளை மேம்படுத்தல்.
- ❖ க.பொ.த(உயர் தர) விவசாய விஞ்ஞானப் பாடத்தைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் .
- ❖ விவசாய நடவடிக்கைகளுக்கென வளங்களை நிலைபேறான வகையிலும் பலன்தரு விதத்திலும் பயன்படுத்தல்.
- ❖ விவசாயத்துறையிலுள்ள முயற்சியாண்மை வழிகளை இனங்காணச் சந்தர்ப்பமளித்தல்.
- ❖ சூழல் நேயம் மிக்க முறையில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட சந்தர்ப்பமளித்தல்.

### 02. கால வரையறை

| | |
|---|---|
| கோட்ட மட்ட போட்டி | - மே 15 க்கு முன்னர் நடாத்தப்பட வேண்டும். |
| வலய மட்ட போட்டி | - ஜூன் 15 க்கு முன்னர் நடாத்தப்பட வேண்டும். |
| மாகாண மட்ட போட்டி | - ஆகஸ்ட் 10க்கு முன்னர் நடாத்தப்பட வேண்டும். |
| தேசிய மட்ட போட்டி | - செப்ரெம்பர் 30 க்கு முன்னர் நடாத்தப்பட வேண்டும். |

### 03. போட்டியை நடாத்துவதற்கான பொது அறிவுறுத்தல்கள்

நடப்பு வருடத்தில் தரம் 11 இல் விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும் பாடத்தைக் கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டிகளில் பங்கேற்க முடியும். எல்லாப் போட்டிகளினதும் ஆரம்பிப்புக்கு முன் போட்டியின் நோக்கங்கள், விதிமுறைகள், புள்ளி வழங்கப்படும் முறை ஆகியன பற்றி மாணவருக்கு விளக்கப்பட வேண்டும். போட்டியின்போது நடுவர்குழாத்தினால் வழங்கப்படும் தீர்ப்பே இறுதியானதாகும்.

3.1. போட்டி நடாத்தப்படும் மட்டங்கள்

- கோட்ட மட்டம்
- வலய மட்டம்
- மாகாண மட்டம்
- தேசிய மட்டம்

**3.2 போட்டி நடாத்தப்படும் மட்டங்களுக்கான அறிவுறுத்தல்கள்**

**3.2.1 கோட்ட மட்டப் போட்டிகள்(மே 15க்கு முன்னர்)**

முதலாம் தவணைப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளுக்கமைய பாடசாலையில் விவசாயப் பாடத்தைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றோரில் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டவாறாக கோட்ட மட்டப் போட்டிகளுக்கென மாணவர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

| விவசாயமும் உணவுத் தொழினுட்பமும் பாடத்தைக் கற்கும் மாணவரின் எண்ணிக்கை | கோட்ட மட்டப் போட்டிக்கென தெரிவு செய்யப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 0-10 | 1 |
| 11-20 | 2 |
| 21-30 | 3 |
| 31-40 | 4 |
| 41-50 | 5 |
| 51 இலும் அதிகம் | 6 (உச்சளவு) |

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு, வலயமட்டத்தில் எழுத்துப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு வலயத்திற்குரிய கோட்டங்கள் அனைத்திலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் பரீட்சை நடாத்தப்பட வேண்டும். இந்தப் பரீட்சையில் உச்ச புள்ளிகளைப் பெற்ற ஐந்து மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு வலயமட்டப் போட்டிக்கு அனுப்பப்பட வேண்டும். தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களது விடைப்பத்திரங்களும் புள்ளிகளுடன் அனுப்பப்பட வேண்டும்.

இதன்போது சமமான புள்ளிகள் பெற்ற மாணவர்கள் இருப்பின் பொருத்தமான முறையொன்றைக் கையாண்டு ஐவரைத் தெரிவு செய்துகொள்வது வலய பாடத்துக்குப் பொறுப்பான பணிப்பாளரது பொறுப்பாகும்.

**3.2.2 வலய மட்டப் போட்டி(ஜூன் 15க்கு முன்னர்)**

வலய மட்டப் போட்டியில் நிலையப் பரீட்சை(SPOT TEST) நடாத்தப்படும். வலய மட்டத்தில் வெற்றி பெற்றோரைத் தெரிவு செய்யும்போது கோட்ட மட்ட எழுத்துப் பரீட்சைக்கான புள்ளிகளும் வலய மட்ட நிலையப் பரீட்சைக்கான புள்ளிகளும் சேர்த்துக் கூட்டப்பட வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட புள்ளிப் பட்டியலில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற ஐவர் மாகாண மட்டப் போட்டிக்கெனத் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.

நிலையப் பரீட்சைக்கென 25 நிலையங்கள் (SPOTS) தயார் செய்யப்பட வேண்டும்.

**3.2.3 மாகாண மட்டப் போட்டி(ஆகஸ்ட் 10க்கு முன்னர்)**

வலயத்துக்கு ஐவர் வீதம் கல்வி வலயங்களின் எண்ணிக்கைக்கமைய போட்டியாளர்கள் மாகாண மட்டப் போட்டியில் பங்கேற்கச் செய்தல் வேண்டும்.

மாகாண மட்டப் போட்டி எழுத்துப் பரீட்சை, நிலையப் பரீட்சை ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும்.

மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரு இடத்தில் எழுத்துப் பரீட்சை, நிலையப் பரீட்சை ஆகியன ஒரே நாளில் நடாத்தப்பட வேண்டும்.

அவ் இரண்டு பரீட்சைகளிலும் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில் உச்ச புள்ளிகளைப் பெற்ற ஐவர் தேசிய மட்ட போட்டிக்கென அனுப்பப்பட வேண்டும்.

3.2.4 தேசிய மட்டப் போட்டி(செப்ரெம்பர் 30க்கு முன்னர்)

தேசிய மட்டப் போட்டி எழுத்துப் பரீட்சை, நிலையப் பரீடசை ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும். இவற்றில் உச்ச புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு தேசிய மட்ட வெற்றி கிட்டும்.

**3.3 வினாப் பத்திரத்தின் அமைப்பு**

இது தரம் 10,11 விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும் பாடத்திட்டம் மற்றும் விவசாயம் ஆகியவற்றுடன் தொடர்பான பொது அறிவு அடங்கிய சுட்டிப்பான சுருக்க விடைகள் எதிர்பார்க்கப்படும் வினாப்பத்திரமாகும். கோட்டம், மாகாணம், தேசிய மட்டப் போட்டிகளுக்கான வினாப்பத்திரத்தின் நேரம் ஒரு மணித்தியாலம் 15 நிமிடங்கள் ஆகும். இவ் வினாப்பத்திரம் 50 வினாக்களைக் கொண்டதாகும்.

**3.3.1 நிலையச் சோதனை**

நிலையச் சோதனை எனப்படுவது தரம் 10,11 விவசாமும் உணவுத் தொழினுட்பவியலும் பாடத்திட்டத்துடன் தொடர்பான மாதிரிகளைத்(உயிருள்ள, உயிரற்ற) தனித்தனியாக வகுப்பறையில் வைத்து அதற்குரிய வினாக்களை அவ்வவ் இடங்களில் தனித்தனியே காட்சிப்படுத்தி குறித்த காலத்தினுள் மாணவரை அவற்றிற்கு விடையளிக்கச் செய்வதாகும். விவசாயப் பாடத்திற்குரிய செயன்முறைத் திறன்களை மாணவர்கள் பெற்றுள்ளனரா என்பதை அறிவதே இதன் நோக்கமாகும். எனவே, மாதிரியை அவதானித்து உரிய காலத்தினுள் சுட்டிப்பாக விடையளிக்கத்தக்கதாக வினாக்களைத் தயாரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

- நிலையப் பரீட்சை வலயம், மாகாணம் தேசிய மட்டங்களில் மட்டுமே நடாத்தப்படும்.
- நிலையப் பரீட்சைக்கென 25 இடங்களில் மாதிரிகள் வைக்கப்பட வேண்டும்.(அதாவது நிலையப் பரீட்சைக்கென உபபிரிவுகள் அடங்கலாகவோ நீங்கலாகவோ 25 வினாக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.)
- நிலையப் பரீட்சையில் ஒரு நிலையத்திலுள்ள வினாவுக்கு விடையளிக்க 2 நிமிட நேரம் வழங்கப்படும்.(நிலையப் பரீட்சைக்கான மாதிரி வினாக்கள் சில பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன)

**3.3.2 ஊடக மொழி**

சிங்கள, தமிழ் மொழிகளுக்கென வெற்வேறாகப் போட்டிகள் நடாத்தப்படக் கூடாது. சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரத்தை தமிழ் மொழியில் அல்லது சிங்கள மொழியில் மொழிபெயர்ப்புச் செய்து சிங்கள, தமிழ் மொழிகளிலான போட்டிகள் ஒரே நாளில் ஒரே நேரத்தில் நடாத்தப்பட வேண்டும்.
நிலையப் பரீட்சைக்கான வினாக்கள் இரண்டு மொழிமூலங்களிலும் வழங்கப்பட வேண்டும்.
மொழிமூலங்களைக் கருத்திற் கொள்ளாது உச்ச புள்ளிகளின் அடிப்படையில் வெற்றியாளர்கள் தீர்மானிக்கப்பட வேண்டும்.

அனுர திசாநாயக்க
செயலாளர்
கல்வி அமைச்சு

பின்னிணைப்பு 01

*நிலையப் பரீட்சைக்கான மாதிரி வினாக்கள்*

(01) பின்வரும் மாதிரிகளை A, B, C எனப் பெயரிட்டு வைக்கவும்.

A - காற்றில் பதிவைத்தல்

B - கிளையொட்டு மேற்கொள்ளப்பட்ட தாவரம்

C – அரும்பொட்டு மேற்கொள்ளப்பட்ட தாவரம்

(i) A, B, C ஆகிய இனப்பெருக்கல் முறைகளைப் பெயரிடுக. (1/2 புள்ளி × 3)

(ii) மாதிரி Aயிலுள்ள தாவரத்தைத் தவிர இந்த முறையைக் கையாண்டு இனப்பெருக்கத்தக்க வேறு தாவரமொன்றைப் பெயரிடுக. (1/2 புள்ளி)


(02) மாதிரிகளாகப் பின்வருவனவற்றை வைக்கவும்.

| A – பூச்சிப் பீடை | B - களை | C – நோய்கொண்ட தாவரம் |
|---|---|---|
| உதா : பழ ஈ<br>சுண்ணாம்பு மூட்டுப்பூச்சி<br>அவுலக்கபோறா | உதா : கோரை<br>நெற்சப்பி | உதா: இலைச்சித்திரவடிவ நோய்<br>பற்றீரிய வாடல்<br>நாற்றழுகல் |

(i) A, B, C ஆகியவற்றை இனங்காண்க. (1/2 × 3 = 1 1/2புள்ளிகள்)

(ii) A எனக் குறிப்பிடப்பட்டுள்ள பூச்சியினால் சேதம் விளைவிக்கப்படும் பயிரைப் பெயரிடுக. ( ½ புள்ளி)

(03) பிழையாகவும் சரியாகவும் தயார்செய்யப்பட்ட றக்டோல் ஒழுங்கமைப்புகள் இரண்டை A , B எனப் பெயரிட்டு வைக்கவும்.




A B

(I) எதனைச் சோதிப்பதற்கென இவ் அமைப்புகள் தயார் செய்யப்பட்டுள்ளன. (01புள்ளி)

(II) A , B ஆகியவற்றுள் பிழையாகத் தயார்செய்யப்பட்டுள்ள ஒழுங்கமைப்பு யாது? (½புள்ளி)

(III) அதிலுள்ள குறைபாடு யாது? (( ½புள்ளி)